# அறிதல்

## கற்றிடக் கற்றல்

"விடயங்களைக் கற்பதல்ல கல்வி, மனதினைச் சிந்திக்கப்பழக்குவதே கல்வி - உலகம் கற்றவர்களுக்கே சொந்தமானது" – அல்பேட் ஐன்ஸ்டீன்



செல்வம் கண்ணதாசன்

# அறிதல்: கற்றிடக் கற்றல்

செல்வம் கண்ணதாசன்

"விடயங்களைக் கற்பதல்ல கல்வி, மனதினைச் சிந்திக்கப்பழக்குவதே கல்வி
உலகம் கற்றவர்களுக்கே சொந்தமானது"

- அல்பேட் ஐன்ஸ்டீன்

-2015-

நூல் : அறிதல் : கற்றிடக் கற்றல்

பதிப்பு : பெப்ரவரி 2015

ஆசிரியர் : செல்வம் கண்ணதாசன்

உரிமை : ஆசிரியரிற்கு

பதிப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்.

பக்கங்கள் : 148

விலை : 350/=

ISBN : 978-955-51696-1-5

# உள்ளே...


| | | |
|---|---|---|
| 1) | கற்றிடக்கற்றல் | 01 |
| 2) | கற்றற் செயற்பாட்டில் "ஞாபகசக்தி"யின் பங்கு | 12 |
| 3) | கற்றல் முறைகள் | 32 |
| 4) | கற்றல் நுட்பங்கள் | 36 |
| 5) | கற்பதற்காக நேரத்தைத் திட்டமிடல் | 42 |
| 6) | க.பொ.த உயர்தரத்தில் பாடத்தெரிவு | 48 |
| 7) | பரீட்சைகள் | 56 |
| 8) | மன அழுத்தம் | 70 |
| 9) | புத்திசாதுரியம் | 77 |
| 10) | இலக்கை அமைத்து வாழ்க்கையில் வெற்றிபெறக் கற்றல் | 92 |
| 11) | பூரண மனிதனாய் வாழ்ந்திடக்கற்றல் | 112 |
| | பின்னிணைப்பு : சுயமதிப்பீட்டுப்படிவம் | 121 |

# 1

# கற்றிடக் கற்றல்

அன்பார்ந்த மாணவ மாணவிகளே, ஆசிரியர்களே, பெற்றோர்களே மற்றும் கற்றலிலும் சுயமுன்னேற்றத்திலும் ஆர்வமிக்க அன்பர்களே!


உலக நியதியை உற்றுநோக்குவோமேயானால், இயற்கையானது தனது இருப்புக்காக எப்போதுமே பல்வகைத் தன்மையைப் பேணுகின்றது. மரம், செடி, கொடிகளிலே பல்வகைத் தன்மை' விலங்குகளிலே பறவைகளிலே பல்வகைத்தன்மை' நுண்ணுயிரிகளிலே பல்வகைத் தன்மை என யாவற்றிலுமே வியாபித்திருக்கும் இத்தன்மையானது, மனிதரிடையேயும் காணப்படுவதில் வியப்பில்லை.

மேற்படி எல்லா உயிரினங்களுமே சூழலிருந்து கற்றுக் கொள்கின்றன. ஆனால், மனிதன் மட்டுமே தனது அபரிமிதமான கற்கும் ஆற்றலைக் கொண்ட மூளையினைப் பயன்படுத்தி வாழ்வில் உயர்வடைய முடிகிறது. எனவே, ஏனைய உயிரினங்களுடன் ஒப்பிடுகையில், தன் விதியை ஓரளவு மாற்றியமைக்கும் வல்லமை மனித இனத்திற்கு சாத்தியமாகிறது.

ஆகவே, எமது சமூகம் தொழிற்துறையினை (தொழிற் கல்வி) மட்டுமின்றி,வாழ்க்கைத் தரத்தினையும், எமது சமூக கலாசார பண்பாட்டு விழுமியங்களையும்பேண (வாழ்க்கைக் கல்வி) கல்வியறிவு அத்தியாவசியமானது.


இந்த கல்வியறிவு மற்றும் கற்றல் என்பன பற்றி சிறிது சிந்திப்போம்.

**கல்வி என்றால் என்ன?**



கற்றல் என்பதனை "சுயமாகக் கற்றல், கற்பிக்கப்படுதல், பயிற்சி போன்ற செயன்முறைகளினூடாகவோ அல்லது அனுபவங்களினூடாகவோ, அறிவையும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளுதல்" என மிக இலகுவாக வரைவிலக்கணப்படுத்தலாம்.

கற்றலுக்கான உளவியல் ரீதியான வரைவிலக்கணமானது, "அனுபவத்தின் ஊடாகவோஅல்லதுபயிற்சியினூடாகவோ நடத்தைக் கோலங்களில் மாற்றங்களை உண்டுபண்ணுதல்" என்பதாகும்.




மேற்படி உருவில் காட்டியவாறு, கற்றலானது பல்வேறு தளங்களில் நடைபெறுகின்றது. அவதானித்தல் (சூழலில், எம்மில், மற்றும் சமூகத்தில் ஏற்படும் பௌதிக மாற்றங்களை), அவற்றை நாம் ஏற்கனவே பெற்றிருக்கின்ற அனுபவத்துடன் அல்லது அறிவுடன்பொருத்திப்பார்த்தல், உய்த்துணர்தல், அவற்றினை உணர்வுபூர்வமாக விளங்கிக்கொள்ளுதல் என்பவற்றினூடாகக் கற்றுக்கொள்கிறோம்.

கற்றல் என்பது, பாட்சாலைகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரிகள் என்பவற்றில் மட்டும்தான் நிகழ்கின்றது என நினைக்கின்றோம். அவை முறைசார் கற்றலில்

பங்காற்ற, நாம் பல்வேறு வழிகளில் நேரடியாகவும் மறைமுக மாகவும் கற்றுக்கொள்வதை அறிந்திருப்பதில்லை.

இவ்வாறு கற்றுக்கொள்பவை எம்மில் நிரந்தர மாற்றங்களை உருவாக்கினால் மட்டுமே நாம் கற்றதாக அர்த்தம் கொள்ள முடியும்.

**நடத்தையில், அறிவில், ஆற்றலில் மற்றும் மனப்பாங்கில் நிரந்தர மாற்றங்கள் ஏற்பட்டால் மட்டுமே நாம் "கற்றிருக்கிறோம்" எனக் கூறிக்கொள்ளலாம்.**

இம்மாற்றங்கள் தற்காலிகமானவை எனில், கற்றலாகக் கொள்ளப்படமாட்டாது. நீடித்து நிலைக்கக் கூடிய மாற்றங் களாக அமைதல் மிக அவசியம்.

கற்றலை எப்போதிருந்து ஆரம்பிக்கின்றோம்?

**கருவிலிருந்தே கற்கத்தொடங்குகிறோம்**

கற்றல் செயற்பாடானது நாம் கருவறையிலிருக்கும் போதே ஆரம்பமாகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கருவானது தனது தாயின் குரலை 4ஆவது மாதத்திலிருந்தே உணரத்தொடங்குகின்றது. அதாவது, புதியதோர் விடயத்தைக் கற்கத் தொடங்குகின்றது. இதன் மூலம் தனது தாய்மொழியின் உச்சரிப்பினை மெல்ல மெல்லக் கற்கத் தொடங்கு கிறது. பிறந்த குழந்தைகள் அழுகின்ற விதங்கள் மொழி களின் உச்சரிப்பிற்கேற்ப மாறுபடுகின்றமை ஆராய்ச் சிகள் மூலம் உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளன.




இவ்வாறே 7[ஆவது] மாதத்திலிருந்து மணத்தினையும் சுவை யினையும் உணரத் தொடங்குகின்றனவாம். தொடர்ந்து கரட்டினை உண்ணக் கொடுக்கப்பட்ட தாய்களுக்குப்பிறந்த குழந்தைகள் கரட்டின் மணத்திற்கு கவரப்பட்டமை ஆராய்ச்சி மூலம் கண்டறியப்பட்டுள்ளது.


இவ்வாறு வெளியுலகத் தகவல்களைத் தாயினூடாகக் பெற்று தான் பிறக்கப்போகும் உலகில் சவால்களைச் சமாளித்து வாழ்வதற்காகத் (மொழி மற்றும் உணவுப்பழக்க வழக்கங்கள்) தன்னைத் தயார்படுத்தலுக்கான கற்றல் கருவறையிலேயே தொடங்குகிறது.

குழந்தை பிறந்தவுடன் முதலாவது சுவாசத்தினை மேற் கொள்கிறது. சுவாசம் தன்னிச்சையற்ற முறையிலேயே நடை பெறுகின்றது. பிற்காலத்தில், இவ்வாறான சுவாசத்தை பயிற்சி யின் மூலம் கட்டுப்படுத்திப் பல்வேறு பலன்களை அடைவதும் ஒரு கற்றற் செயற்பாடே.

எம்மிடமுள்ள இயல்பான விடயத்தைக் கற்றலின் மூலம் மேம்படுத்திக்கொள்ளலாம் என்பதற்கு இவ்விடயத்தை நல்ல தோர் உதாரணமாகக் காட்டலாம்.

அதன்பின்னர், "உயிர் வாழ ஆகாரம் தேவை" என்ற வகையிலே தாயின் மார்பிலே பால் குடிப்பது இயல்பாகவே நடைபெறுகின்றது. ஆனால், புட்டிப்பாலைக் குடிக்கக் குழந்தைக்குக் கற்றுக் கொடுக் கிறோம்.





குழந்தைகள் தங்களது வயது முதிர்ச்சிக் கேற்ப இயல்பாக செயற்படுவதை கருத்தி லெடுக்காது, வலிந்து கற்றுக்கொடுப்பது என்பது இங்கிருந்தே தொடங்குகின்றது.

கருவறையிலிருந்த வெதுவெதுப்பான தன்மையிலும் சூழல் வெப்பநிலை குறைவாக இருப்பதால், அரவணைப்பை நாடுகின்றது குழந்தை. இதன் மூலம் அன்பை, அரவணைப்பைக் கற்றுக் கொள்கிறது.



பிறந்து 4ஆவது மாத காலத் திலிருந்து, தான் கருவறையில் கற்க ஆரம்பித்ததைப் பயன்படுத்த ஆரம்பிக்கின்றது. அதாவது, ஒலி களையும் மண நுகர்ச்சியையும் அதிகம் உணரத் தலைப்படு கின்றது.

பார்வைப் புலனைப் பொறுத்தவரையிலே, மிகவும் பின் தங்கிய நிலையிலேயே குழந்தை பிறக்கிறது. முதலாவது மாதத்தில் உலகானது மங்கலாக கறுப்பு வெள்ளையாகவே தெரிகிறது. இரண்டாவது மாதமளவில் நிறங்களையும் உருவங்களையும் பிரித்தறிய முயல்கிறது. நான்காவது மாதமளவிலே தாயின் முகத்தை அடையாளம் கண்டு கொள்கிறது.



எட்டாவது மாதத்திலிருந்து அனைத்துப் புலன்களும் (ஓசை, பார்வை, மணம், சுவை மற்றும் தொடுகை) நன்றாகத் தொழிற் படத் தொடங்குகின்றன. இப்